1971 டிசம்பர் 6]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே என்னுடைய பதிலில் தெரிவித்திருக்கிறேன். அந்தக் குழுவினிடத்தில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கப்படும். தொழிற் சங்கத் தலைவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். கனம் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன கருத்தும் நினைவில் கொள்ளப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், எப்பொழுதுமே ஆணுக்கு ஒரு மாதிரி கூலியும், பெண்ணுக்கு ஒரு மாதிரி குறைந்த கூலியும் பல தொழிற்சாலைகளில் கொடுத்து வருகிறார்கள். இதனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள சமத்துவம் பாதிக்கப்படுகிறது. பெண்கள் அதிகமாக வேலை செய்கிறார்கள். அப்படியிருந்தும் கூலி மாத்திரம் குறைவாகக் கொடுக்கிறார்கள். எனவே ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாகக் கூலி கொடுக்க இந்தக் குழு ஆலோசனை தெரிவிக்கும்படி இந்த அரசாங்கம் கூறுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, முன் இருந்த அரசாங்கத்தைவிட இன்றைய அரசாங்கத்தில் பெண்களுக்கு அதிகமாகச் சம்பளம் தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆண்களைவிடப் பெண்களுக்கு அதிகச் சம்பளம் தரப்பட வேண்டுமென்பது எங்கள் ஆசையாகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்தக் குழு அமைக்க எவ்வளவு நாட்கள் ஆகும் என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, இன்னும் 10, 15 நாட்களுக்குள்ளாக இந்தக் குழு அமைக்கப்படும்.

அரிசனங்களுக்கு தையல் மிஷின்கள் வழங்கல்

*** 104 வினா—திரு. எம். முத்தையா:** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-லிருந்து 1970 வரை எத்தனை தையல் மிஷின்கள் இனாமாக அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன?

(இ) எந்த மாவட்டத்திற்கு அதிகம் வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 2,533 மிஷின்கள்.

(இ) சென்னை மாவட்டத்திற்கு அதிகம்.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, இந்தக் கருவிகள் வழங்குவது அரிசனங்களுக்கு மட்டும்தான் இருக்கிறது. இதே போல் மதம் மாறி கிறித்தவர்களாக இருக்கப்பட்ட அரிசனங்களுக்கும் இம்மாதிரி கருவிகள் வழங்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாநில அரசாங்கம் தருகிற சலுகைகள் அத்தனையும் மதம் மாறிய கிறித்தவ அரிசனங்களுக்கும் உண்டு. எனவே இது அவர்களுக்கும் பொருந்தும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இனமாக வழங்கப்படும் தையல் மிஷின்கள் மிகவும் குறைந்தவையாக இருக்கின்றன. இந்த எண்ணிக்கை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே இதை இனிமேலாவது அரசாங்கம் மறுபரிசீலனை செய்து எண்ணிக்கையை உயர்த்த முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை பேர்கள் பயிற்சி பெறுகிறார்களோ அத்தனை பேர்களுக்குத்தான், பயிற்சி பெற்றவர்களுக்குத்தான் என்ற முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகப்படி பயிற்சி பெற்றால் அதிக மிஷின்கள் தரப்படும். அதிலே 10 சதவிகிதம் வரை பணம் வசூலிக்கப்படுகிறது. சிலர் அந்தப் பணத்தை வசூல் செய்ய உடந்தையாக இல்லாததால் பயிற்சி பெற்றிருந்தாலும் கிடைக்காமல் போகலாம். இரண்டும் பூர்த்தியாக்கப்பட்டால் நிறைய மிஷின்கள் தர ஏதுவாக இருக்கும்.

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, பின்தங்கிய வகுப்பினர்களுக்குத் தையல் மிஷின்களை இனமாக வழங்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சரவர்களைக் கேட்க வேண்டிய கேள்வியாகும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்தக் குடிசைவாழ் மக்களுக்கு இலவசமாகத் தையல் கருவி அளிப்பது இன்னும் தாராளத் தன்மையோடு மேற்கொள்ளப்படுமா ? மேலும், இம்மாதிரி கொடுக்கப்பட்ட சில மிஷின்களை 5 ரூபாய் தவணை கொடுக்காத காரணத்தால் 25 ரூபாய்க்கு ஏலம் போட்டு என் தொகுதியில் நடந்த கொடுமையைப்போல் நடக்காமல் தடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நிறையக் கொடுப்பதற்கு நிதிநிலை இடம் தரவில்லை. அதைப்பொறுத்துத் தான் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படும். வினியோகத்தில் சில கொடுமைகள் ஏற்பட்டால் அதை அரசாங்கம் கவனித்து நீக்க முடியும்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவரவர்களே, இவ்வாறு தையல் மிஷின்கள் வழங்கப்பட்ட பிறகு அவைகள் சரியாகச் செயல்படுகின்றனவா என்பதை நாம் பார்க்க வேண்டி

1971 டிசம்பர் 6]

யிருக்கிறது. இவைகளைத் தவிர்க்க ஊராட்சி மன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அல்லது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் இவர்கள் மூலமாக வழங்கப்படுகின்றனவா ? அல்லது சரிவர நடவடிக்கை எடுக்க தனி அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நலத்துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக அவை வினியோகிக்கப்படுகின்றன. அவர்கள் மாதாமாதம் சென்று ஒழுங்காக நடத்தப்படுகிறதா, உண்மை யிலேயே வழங்கப்பட்ட மிஷின்கள் மூலம் தொழில் செய்கிறார்களா என்பதைக் கண்காணித்துத்தான் வருகிறார்கள்.

Coaching centres for competitive examinations

* 105 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to increase the coaching centres for Scheduled Castes and Scheduled Tribes candidates seeking competitive examinations; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, பல மாவட்டங்களிலே போட்டிப் பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குச் சலுகை தரப்படாமல் இருப்பதால் மாவட்ட வாரியாக ஏற்படுத்த உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது குரூப் 4—ஜூனியர் அசிஸ்டெண்ட்ஸ் என்ற சர்வீசிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர் களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாவட்டந்தோறும் புதிய பயிற்சி நிலையங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது 20 இடங்களில், ஒவ்வொரு நிலையத்திலும் 50 மாணவர்கள் விதம் 1,000 மாணவர்களுக்கு 1 ஆண்டுக்குப் பயிற்சி தரும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

ஏழை உழவர்களுக்கு நிலம்

* 106 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழை விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் விவசாயத்திற்கு அரை ஏக்கர் நிலமும், வீடு கட்ட ஐந்து சென்டு இடமும் இலவசமாக வழங்கிட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனை யிலுள்ளதா ?